S. ABDUL HANNAN
MARRIAGE REGISTRAR
KANDY

# ஞானதீபம்.

7095 ✓

புத்தகம். 1. | 1892—௵ ஆவணி ௴ 1 உ | இலக்கம்—1

பிஸ்மில்லாஹிர்ரகுமானிர்ரஹீம்.

புகழெல்லாம் ஒருவனுக்கே அவன் திருநாமம் கித்தாபுகளுக்கெல்லாம் சிரேஷ்ட கிரீடமாயும், அவனைப் புகழ்வது திருமந்திரங்களனைத்திலும் உயர்ந்த திட்டமாயு மிருக்கின்ற காருண்ய கடவுளாகிய அல்லாசுபுகானகுவத்தாலாவின் உதவியை நம்பிக்கைவைத்து இப்பத்திரிகையைத் தொடங்கினோம்.

ஈமானை மூன்றுவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது, தக்லீதுடைய ஈமான். அதாவது:—தாய்தகப்பன், உஸ்தாதுமார்கள், உலமாக்கள் முதலியவர்களுடைய சொல்லையேற்று யாதொரு அத்தாட்சிகளில்லாமல் விசுவாசங்கொள்ளுகிறது. இந்த ஈமான் கூடுமென்றும், கூடாதென்றும் இமாம்களுக்குள்ளே தர்க்கங்களுண்டாயிருக்கின்றன. பெலமான சொற்படிக்குக் கூடும்.

இரண்டாவது, இஸ்தியாருடைய ஈமான். அதாவது—நம்முடைய அக்கிலைக்கொண்டு அத்தாட்சிகளைத் தேடி எக்கீனில் திட்டமாக்கிக் கொள்ளுகிறது. இது உறுதியான ஈமான்.

மூன்றாவது, தன்நபுசு பரிசுத்தமாகி திரைகள் நீக்கப்பட்டு, கஷ்பைக் கொண்டுண்டாகிற ஈமான். இது ஆரிபீன்கள், அவுலியாக்கள், குத்துபுமார்கள், நபிமார்களாகியவர்களுடைய ஈமானுயிருக்கும்.

மேலே சொல்லிய தக்லீதுடைய ஈமானுக்கும், இஸ்தியாருடைய ஈமானுக்குமுள்ள வித்தியாசத்திற்கு ஒரு உதாரணஞ் சொல்லுகிறோம். ஒரு மனிதனிடம், நீ ஏன் தொழுகிறாயென்றுகேட்டால், அவன் மறுமொழியாக நான், அல்லாகுத்தாலா தொழும்படிக் கேவியிருக்கிறான். நான் அவன் ஏவற்படி நடந்தால் சொர்க்கத்தைத் தருவானென்றும், நடக்காதுபோனால் நரகத்திலதாபுசெய்வானென்றுஞ் சொல்லியிருப்பதால் தொழுகிறேனென்று சொல்வது, தக்லீதுடைய ஈமானைக்

கொண்டாயிருக்கும். இது சிறுபிள்ளைகளுடைய மறுமொழியைப்போலாயிருக்கும். ஒரு சிறுபிள்ளையிடம், நீ புத்தகத்தை ஏன் படிக்கிறாயென்று கேட்டால், என் தகப்பன் எனக்குப்படிக்கும் படிக்குக் கட்டளைபண்ணியிருக்கிறார்கள். நான் படித்தால் சில, தித்திப்பான பதார்த்தங்களைத் தருகிறதாகவும், படிக்காதுபோனால் அடிக்கிறதாகவுஞ் சொல்லியிருக்கிறார்கள். அதனால் நான்படிக்கிறேனென்றுசொல்வான். பராயமுடையவனிடம் கேட்டால், என் தகப்பன் கட்டளைபண்ணியிருக்கிறார். அக்கட்டளைப்படிக்கு நான் படித்தாலெனக்கு, இன்ன இன்ன பிரயோசனங்களுண்டாகும் அதனால் நான் படிக்கிறேனென்று சொல்வான். இது, இஃதியாருடைய ஈமானைக்கொண்டாயிருக்கும். நாம் தொழுகிறது இன்ன காரியத்துக் கென்பதைப் பின்னால் சொல்லுவோம்.

இந்த ஊர்களில் அநேக சனங்களுடைய ஈமான், தக்லீதுடைய ஈமானாயிருக்கின்றது. இதற்குக்காரணம், இங்கு வளங்குகிற உரைக்கிதாபுகளில் குறுவானிலுள்ள வசனங்களையும், ஹதீதுகளையும், கிஸ்ஸாக்களையும் காட்டியிருப்பதல்லாமல், அக்கிலைக் கொண்டு ஆராய்ந்து திட்டப்படுத்துதற்குரிய இல்முகளடங்கியிருக்கும் கிதாபுகள் அரிதாக விருப்பதாலும், அந்த இல்முகளைத் தேடாதிருப்பதாலுமே. அநேகருடைய ஈமான் பெலவீனமாயிருக்கிறது, இந்த இல்முகளைக் கற்றுக்கொள்ளாததனாலேயே ஒரு நோயை யறிந்து, அதற்குரிய மருந்தைத் தேடவேண்டும். வணக்கம் ஒரு மருந்தாக விருக்கும் நம்முடைய நப்சிலுள்ள நோயை யறிந்து அதற்குரிய மருந்துகளாகிய வணக்கங்களைப் பத்தியத்தோடு உபயோகித்தால் பலன்கொடுக்கும் அந்த நோய் குணமாகிறதும், குணமாகாமலிருக்கிறதும் நமக்கே தெரியவரும். அநேகர் வணக்கங்களைச் செய்துவந்தும் கல்பு இருளாகவும், தீய குணங்கள் நிரம்பியும், துன்யாவினாசை மேலிட்டு மிருப்பது, இந்த இல்முகளைக்கொண்டு ஈமானுறுதியாகாததினாலேயே. அல்லாகுத்தாலாவின் உதவியைக்கொண்டு இவைகளை விவரித்துக் காட்டுவோம் வாசிப்பவர்கள் இப்பத்திரிகையைப் பலமுறையும் கவனமாய் வாசித்து ஆலோசித்து மனத்திற்றரிபடுத்தி வந்தால், நமது சரீயத்துடைய இன்பம் தெரியவருகிறதுமல்லாமல், நமது மார்க்கத்தின் பிரகாசமும் வெளியாகும். மற்றும் மார்க்கங்களுக்கும், நமது மார்க்கத்துக்குமுள்ள வித்தியாசமும் நன்றாய்த் துலங்கும்.

அல்லாகுத்தாலா குறுவானில் வத்தீனி என்கிற சூறத்தில் (லகத்கலக்னல் இன்சான பீஅஹஸனிதக்வீம், தும் மறதத்னகூ அஸ்பலசாபிலீன்) நாங்கள் மனிதனை உயர்த்தியான தன்மையாய்ப் படைத்தோம், திரும்பவும், கீழ்மையிலு மதிக கீழ்மையானவர்களாக்கினோமென்று திருவுளம்பற்றி யிருக்கிறான், இந்த ஆயத்தில், திரும்பவும் கீழமையிலு மதிக கீழ்மையானவர்களாக்கினோமென்ற வசனத்தை விளக்கிக் காட்டப்போகிறோம்.

நாமிந்த ஆயத்தின்பொருளை விளக்கும்போது, சில அறபுச்சொற்களைப்பாவிக்கப்போகிறோம். அச்சொற்களின் பொருள்களை வாசிப்பவர்கள் நன்றாயறிந்திருப்பது அவசியம். அவைகளாவன;= கல்பு. றூகு. நப்சு. கல்பென்பதற்குத் தமிழில் இருதயமென்று சொல்லப்படும். அதற்கு இரண்டு பொருளுண்டு. முதலாவது, மாங்காய்வடிவான சதைக்கட்டி. இது நெஞ்சில் இடது புறமிருக்கிறது. அதினுள்ளே ஒருகுழியுண்டு, அந்தக் குழியில் கருநிறமான இரத்தமிருக்கும். அந்த இரத்தத்தைப் பொதிந்திருப்பது றூகு. அந்த இரத்தம் றூகுடைய ஊற்றுக்கண்ணும், றூகுவெளியாகும் சுரங்கமுமாயிரு

க்கும். இரண்டாம்பொருள், குறித்த உருவமுடைய கல்லைக்கொழுகிய றபுக்குரிய கண்டிப்பற்ற, நுட்பமான ஒரு பொருள் இதுதான், உள்ளமையில் இன்சானுயிருக்கும். அறிவு, புத்தி, நாட்டம் முதலியவைகளெல்லா மிதற்கே உரியது. சரீரத்திலுள்ள சகல உறுப்புகளும் உருவமுடைய கல்புதானும் அந்தக்கண்டிப்பற்ற இன்சானென்கிற பொருளின நாட்டங்களையும், தேட்டங்களையும் நடத்துதற்குரிய கருவிகளாயிருக்கும். அந்தக் கண்டிப்பற்ற இன்சானின் உள்ளமையும், அது சரீரத்தைக் கொழுகியிருக்கிற விதங்களும், பாத்திலுடைய இல்முக்குரியது.

றூகு என்பதற்கு இரண்டு பொருள்களுண்டு. முதலாவது, ஒரு நுட்பமானபொருள். அது மேலேசொல்லிய உருவமுடைய கல்பின் குழியிலிருந்து வெளியாகி. சகல நரம்புவழியாக சரீரமுழுவதும் பரந்து ஹயாத்தைக் கொடுக்கும். அது ஓர் விளக்கைப் போலாயிருக்கும். விளக்கு, வீட்டின் மத்தியிலிருந்து பிரகாசித்து வீட்டின் பற்பல கோணங்களுக்கும் ஒளிகொடுப்பதுபோல, சரீரமுழுவதுக்கும் ஹயாத்தென்கிற ஒளிவையும், பார்வை, கேள்வி, முதலிய தத்துவங்களையுங்கொடுத்து நிற்கும். இதற்குத்தான் வைத்தியர்கள் றூகென்று சொல்வது. இரண்டாம் பொருள், மனிதனில் அறிவுகளெல்லா மமைந்த ஹக்குக்குரிய நுட்பமான ஒருபொருள். இதைக்குறித்துத்தான் அல்லாகுத்தாலா, சொல்லும் நபியே! றூஹாவது எனது நாயனுடைய கருமத்திலுள்ளது என்று திருவுளம்பற்றியது. இதினுடைய உள்ளமையைக் கஷ்பையுடையவர்களல்லாதவர்களுக்கு விளங்க, அல்லது மட்டுப்படுத்திக்கொள்ளக் கூடாது.

நபுசுக்கு மிரண்டு பொருள்களுண்டு. முதலாவது, கோபம். ஆசைமுதலிய குணங்களெல்லாவற்றுக்கும் பொதுப்பெயர். இரண்டாவது, மேலே கல்புக்குச்சொல்லிய இரண்டாம்பொருள். அதாவது:—இன்சான்.

ஒவ்வொரு படைப்புக்கு மொவ்வொரு சூறத்தல்லது, உருவமிருந்தாலும் அவைகளுக்கு அவைகளின் குணங்களைக்கொண்டே இவ்விதமான படைப்புகளென்று சொல்லப்படும். மனிதனுக்கு, துன்யாவிலுள்ள பற்பல மிருகங்கள் ஊர்வன முதலியவைகளுடைய குணங்களிருக்கின்றன. இமாம்களிற் சிலர் சுருக்கத்துக்காக நான்கு வகையாய்ப் பிரித்திருக்கிறார்கள். முதலாவது, ஆடு, மாடு, பன்றிபோலுள்ள மிருகங்களின் குணம். இரண்டாவது, துஷ்ட மிருகங்களின் குணம். மூன்றாவது, சைத்தானின் குணம். நான்காவது, இன்சானின் குணமாகிய நான்கு வகைகளே.

நாமொவ்வொருவரும் நமது நப்சை நோட்டமிட்டு, இதிலெந்தக் குணமதிகரித் திருக்கிறதென்பதை யாராயவேண்டும். ஒருமனிதன், தன்நோயை நன்று யாராய்ந் தறிந்தாலல்லாது வைத்தியஞ் செய்யக்கூடாது. ஆடுமாடு போலுள்ள மிருகங்களின் குணமாவது, தின்னுகிறது முறங்குகிறதும், ஆண் பெண்ணுகக் கூடுகிறதுமாகயிருக்கும். நமக்ரு, தின்னவும் உறங்கவும், ஜமாஉ செய்யவும் நாட்டமே யல்லாது நம்முடைய தொடக்கத்தையும், நம்முடைய மவுத்தையும், மவுத்துக்குப் பின்னுள்ள ஆல்களையும், நம்மைப்படைத்த நாயனையும் அவனுக்குரிய கடமைகளையும் நினைக்க, மனமிடங்கொடாதிருந்தால், இவைகள் ஆடுமாடு போலுள்ள மிருகங்களின் குணங்களென்று திட்டப்படுததிக்கொள்ளவும்.

பன்றியின் குணமோ, மேலேசொல்லிய குணங்களோடு அடங்காத ஆவலும், அசங்கிதமானவைகளை யெல்லாம் தின்னுதலுமாம். ஒரு மனிதனுக்கு மேலேசொல்லிய குணங்களோடு அடங்காத ஆவலும், எப்படிப்பட்ட ஹறா

மான நினைத் தின்றுதலுமாயிருந்தால் அவன், கின்னரனுடைய குணமுடையவனாயிருக்கிறான். ஒரு மனிதனுடைய சீவனத்துக்கு வேண்டியவைகளோ மிகவுஞ் சொற்பம். ஆனால் இந்த மிருகத்தின் குணமுடையவனின் ஆவலுக்கோ! மட்டுதிட்டமிராது. எவ்வளவு சம்பாதித்தாலும் போதுமென்ற எண்ணமவனுக்குண்டாக மாட்டாது. சம்பாத்திய மதிகப்பட அதிகப்பட, ஆவலு மதிகப்பட்டு வெறிகொண்டவனைப்போலாகிவிடுவான். சம்பாத்தியத்தைச் செலவுசெய்து, தேடவேண்டிய நன்மைகளைச்செய்ய நினையான். குறுவானில் அல்லாகுத்தாலா (அல்ஹாக்குமுத்தக்காதிரு ஹத்தாசுர்த்து முல்மக்காபிறு.) திரவியங்களையும் பிள்ளைகளையு மதிகமாக்கி கொள்ளு மாவல், உங்களைப்பிடித்து நிற்கின்றது. நீங்கள் கபுறைச் சந்திக்கும்வரைக்கு மென்று சொல்லியபடி, பொருளைச் சம்பாதிக்க ஆவல் கொண்டவர்களின் மனந்தெளியாது, அவர்களுக்கு சக்கறாத்து வந்து பிடிக்கும்வரையும். அப்பொழுது அவனுக்குண்டாயிருந்த வெறி நீங்கி, ஆ! மோசம்போனேனே என்று பெருமூச்சு விடுவான். நான் பிழைத்துக்கொண்டா லென் ஆஸ்திகளையெல்லாம் நன்மையிற் செலவுசெய்வேனென்று நினைப்பான். ஆனால், அந்த எண்ணம் பலன்கொடாது. அவன் தான் ஆவலாய்ச் சம்பாதித்த ஆஸ்திகளையெல்லாம் விட்டுவிட்டுப் போகிறேனே என்று நினைத்தவுடன், கல்பில் நெருப்புப்பற்றிக் கிளம்பிவிடும். முஹியித்தீனிபுனு அறபிறளியல்லாகு அன்கவர்கள் சொற்படி அவன் ஆஸ்திகளெல்லாம் அவன் தோற்றத்தில் அக்கினிபோலாகி வேதனைசெய்கின்ற நரகமாகிவிடும். அதுமுதலவன் அந்த அதாபிலாகிவிடுவான். பொருளைப் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து நன்மையிற்செலவு செய்கிறவனுக்கோ, அவன் கல்பு பூரிக்கும். மோக்ஷ ஆனந்தத்தின் இன்பத்தை யனுபவிப்பான்.

இரண்டாவது, துஷ்டமிருகங்களின் குணம். மனிதரின் சரீரத்திற்கு அல்லது மனத்திற்கு நோவுண்டாக்கிறது மனிதரை யடிக்கிறது, கொடுமைசெய்கிறது, தூஷிக்கிறது, அபவாதுகள் சொல்லுகிறது பழிக்கிறது முதலிய அநியாயங்கள் செய்கிறது, துஷ்டமிருகங்களின் குணமாகவிருக்கும். ஒருவனுக்குப் பிறர் ஐபுகளைப் பேசுகிறதும், பழிக்குகிறது மல்லது கேட்கிறதும் இன்பத்தைக்கொடுக்குமானால், அவனுடைய நப்சு துஷ்டமிருகத்தின் குணமாயிருப்பதைத் திட்டப்படுத்திக் கொள்ளலாம்.

மூன்றுவது, ஷைத்தானின் குணம் இது மேலேசொல்லியவைகளெல்லாவற்றிலுங் கொடியகுணம். பொறாமை குரோதம், வஞ்சகம், துரோகம, தந்திரம், மாறுபாடு முதலிய துற்குணங்கள்.

நாலாவது, இன்சானுடையகுணம். அதாவது:—மேலேசொல்லிய குணங்களை யுண்டாக்கிற தேட்டம, ஆசை, கோபம் முதலியவைகளையெல்லாம் அக்கிலைக்கொண்டு நிதானபபடுத்தி, குறித்த தீயகுணங்களையெல்லா மடக்கி, நபுசைத் தூய்மையாக்கிச் சற்குணமும், துன்யாவின் வாழ்வு மிகவுஞ் சொற்பமென்றும், ஆகிறத்தின் வாழ்வு நீடூழி காலமென்று முறுதிகொண்டவனாயும், அல்லாகுத்தாலாவுடைய லிக்காவின் தரிசனையை ஆசித்தவனாயு மிருப்பவன் இன்சானின் குணமுடையவனா யிருக்கும்

வாசிப்பவர்களே! ஒவ்வொருவரும் தனக்குண்டாயிருக்கிற நோயை, நாடியைப்பிடித்து அறிவதுபோ லுங்கள் சகல டாக்குதகளையுந் சொற்பநேரம் விட்டு நீங்கி, உங்கள் நபுசுகளையே நோட்டமிடுங்கள். உங்களில் மேலே சொல்லிய மிருகங்களின் குணங்களோ, இன்சானின் குணமோ அதிகரித்திருப்பதென்பதைப் பாருங்கள். மி

ருகங்களின் குணமல்லது செய்தானின குணம அதிகரித்திருந்தால் அவர்களின் நிலைபரம், மகாபயங்கரப்பட்டதாக்கதென்று நிட்சயித்துக் கொள்ளுங்கள் அந்த வஉரூ பலன்கொடாது. முராண்டையுடைய மிருகங்கள் நிலையையடைத்துத் தானிருந்தால் போல் அவைகளை யந்த நப்சு தன்வசப்போட்டு, அதின விருப்பப்படியே இழுத்துக்கொண்டுபோகும் இது நலவு, இது தீதென்று அக்கல் சொல்லும, அக்கிலைக் கீழ்ப்படுத்திவிட்டு நிலையே இருக்கும். அக்கில் தப்பாகவும், நப்சு அடிமையாகவு மிருக்கவேண்டியது மாறி. நப்சு தப்பாகவும, அக்கில் அடிமையாகவும் மாறிவிடும் எவ்வளவோ சனங்கள் இஸ்லாமானவர்களின் வயிற்றிற் பிறந்து, இஸ்லாமானவர்களின் பெயரைத் தரித்துக்கொண்டு, துன்யாவின் ஆசையிலே மருண்டு, ஆகிறத்தை நினையாமல் நடக்கிறவர்களாயிருந்தும், மவுத்துக்குப்பின் சலாமத்துக்கிடைக்குமென்று நம்பிக்கைவைத்திருக்கிறார்கள். இன்னுமெவ்வளவோ பெயர்கள், துஷ்டகுணங்களுக்கும், துன்யாவின் ஆசைகளுக்கும கீழ்ப்பட்டவர்களாயிருந்து, தொழுகை நோம்பு போலுள்ள வணக்கங்களைச் செய்துகொண்டு, மவுத்துக்குப்பின முத்தக்கீன்களுடைய பதவியைப் பெற்றுக்கொள்ளலாமென்று உறுதிவைத்திருக்கிறார்கள் ஆனாலெங்களெவ்வொருவருக்கும் எங்களின முடிவு இவ்விதமாகுமென்று இப்பொழுதே திட்டப்படுத்திக்கொள்ளக்கூடும. நமக்குடைய பதவி சொர்க்கத்துக்கோ, அல்லது நரகத்துக்கோவென்று இப்பொழுதேயறிந்து கொள்ளக்கூடும. அல்லாகுத்தாலா குறுவானில் (கத்அப்லஹமன்ஸக்காஹா. வகத்காப மன்தஸ்ஸாஹா.) நப்சைத் தூயமையாக்கினவன் ஜயமடைந்தான். அதைக் கெடுத்தியாக்கினவன் கைசேதமடைந்தானென்று திருவுளம் பற்றியதுபோல், நம்முடைய நடக்கைகள் மிருகத்தின் தன்மையாயிருக்கின்றதா, [illegible] து, நபசுக்குணங்களை [illegible] தால், நமது [illegible] க்கும். சரீரத்தை விட்டும ஆத்மா பிரிந்தவுடனே நம்முடைய ஆத்மா நம்முடைய அமலுகளின் [illegible] மிருகத்தின் குணமயிருக்கிறதோ, அந்தந்த மிருகத்தின் ரூபமாக ஆத்மீகாலம் அதாபு செய்யும். இதற்கத்தாட்சி, நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஹதீதும், இமாம அப்துல்கரீம் ஜைலி றஹ்மதுல்லாகு முகியித்தீனிபனு அறபி, ரலியல்லாகு அன்கு முதலிய பெரியோர்களுடைய சொல்லுமல்லாமல், இதைப் பெரிய பெருவருடைய அக்கிய மேறைக்செ [illegible] ளும். இமாம் கஸ்ஸாலி றழியல்லாகு சொல்லியிருக்கிறார்கள், ஒரு படைப்பின் வெளிரூப மெப்படியிருந்தாலும், அதின் குணத்தைக்கொண்டே இன்னபடைப்பென்று பெயர்கொடுக்கப்படும். ஒருவன் மனுஷரூபமுடையவனாயிருந்தாலும், இன்ஸானுடைய குணம அவன் நப்சிலமைந்து தலைமையாயிருக்கையில், அந்த மிருகத்தின் ஆவலுக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்து மவுத்தானாலந்த ஆவல். அவன் நப்சைவிட்டும் நீங்காது. சரீரமிருக்கும்போது அக்கிலைகொண்டு அதைக் கீழ்ப்படுத்துக்கூடாதவனாயிருந்து, சரீரத்தை விட்டுப்பிரிந்தபின், ஒன்றுஞ் செய்வதற்கிடமில்லை சுன்னத்து ஜமாஅத்துகளுடைய இமாம்களின் சொற்படிக்கு, பறுஸகுடைய ஆலமதில் அந்த மிருகங்களின் ரூபமெடுத்து அதாபு படுவான். தனாசகியா வென்கிற கூட்டத்தவர்கள், இந்துக்கள்,புத்தர்களாகியவர்களுடைய விசுவாசம், அந்த நப்சுக்குண்டாயிருந்த ஆவல் திரும்பவும் பூலோகத்திற் கிழுத்து, அந்த மிருகங்களாய்ப்பிறக்கச் செய்யுமென்பதே.

ஆகையால் அல்லாகுத்தாலா குறுவானில் மனிதர்களைக் கீழ்மையிலும்

மிகவுங் கீழ்மையானவர்களாக்கிறோ
மென்ற வசனத்திற்கு, நாம் காட்டிய
அத்தாட்சிகள் போதுமாயிருப்பது ம
ல்லாமல், துன்யாவிலுள்ள பற்பல வே
தங்களு மவ்விதமே சொல்லுகின்றன.
ஆனால் மற்றும் வேதங்களி லதற்கு சப
புகள் பலவிதமாய்ச் சொல்லியிருக்கி
ன்றது. கிறிஸ்தவர்கள் ஆதமலைகிஸ்ஸ
லாமுடைய பாவம், யாவருக்கு முண்
டாகிவிட்டதென்றும், இந்துக்கள் புத்
தர்கள் முன்ஜன்மத்திற்செய்த தீவினை
யா லிவ்விதமாய்ப் பிறந்திருக்கிறோமெ
ன்றுஞ் சொல்லுகிறார்கள். ஒருவிஷய
த்திற் சகல வேதங்களு மொற்றுமை
யாயிருக்கின்றன.

அதாவது—மனிதனுடைய நபுசு மி
கவுங் கீழ்மையான தன்மையிலிருக்கி
ன்றதென்பதிலேயே, அவைகளைத் தூ
ய்மையாக்கி, சற்குணம் கொள்ளாத
வரையில், ஹலாக்காய்ப் போகவேண்
டுமென்பதுமே. நமது மார்க்கப்படிக்
கு, பறுஸகுடைய ஆலத்திலும், இந்து
க்களுள் புத்தர்களுடைய வேதப்படிக்கு,
இவ்வுலகத்திலும் மிருகங்களாய்ப் பி
றக்கிறதென்றுஞ் சொல்லப்பட் டிருக்
கிறது.

எனது உடற்பிறப்பாகிய முஸ்லிம்
களே இதிலும் பயங்கரமான காரிய
மென்ன விருக்கின்றது. நன்றாய்ச்சிந்
தியுங்கள். உள்ளமையில், குணங்களை
க்கொண்டு இப்பொழுது மிருகங்களா
யும், பின்பு ரூபத்துடனே மிருகங்க
ளாயு மாகிறதுபோல் பயங்கரமான கா
ரியம் வேறுண்டா? இவைகளைச் சிந்தி
க்க உங்கள் நப்சு இடங்கொடாதா? து
ன்யாவின் பற்பல காரியங்களை யெல்
லாம் மிகவும் சாக்கிறதையாயும் கவ
னமாயும் பார்க்கிறீர்களே. உங்கள் ந
ப்சையும உங்களுக்குண்டா யிருக்கிற
ஆபத்துகளையும் ஏன் நோட்டமிடுகிறீர்
களில்லை? சொற்ப நஷ்டமுண்டாகிற
காரியம் வரும்போது எவ்வளவோ பத
றுகுறீர்கள். ஹலாக்கும் நீடூழிகாலத்
து அதாபும் நெருங்கியிருப்பதை ஏன்
கவனிக்கிறீர்களில்லை.

நப்சின் குணங்களைக் கீழ்ப்படுத்தித்
துப்தாகிறது, மிகவும் வருத்தம். இத
ற்குப் பெரிய பீஸபீலென்று நபிசல்ல
ல்லாகு அலைகிவஸல்லம் சொல்லியிரு
க்கிறார்கள். நப்சைச் சீர்படுத்துதற்கு
சசெய்யவேண்டிய சட்டங்களுக்கு, ச
ரீயத் தல்லது மார்க்கமென்று சொல்ல
ப்படும். உலகத்திற பற்பல வேதங்க
ளிருக்கின்றன. ஒவ்வொரு வேதமும்
நப்சின் கெடுதிகளை மாற்றுதற்குரிய ச
ட்டங்க ளடங்கினதாயிருக்கும் ஒவ்
வொரு வேதக்காரர்களும், தங்கள் த
ங்கள் வேதத்திலுள்ள சட்டங்களையே,
அதற்குத்திறமென்று பாராட்டுகிறார்
கள். உலகத்தி லிக்காலத்திலே, நாற்
பதுதொரு கோடியே முப்பது லக்ஷம்
கிறிஸ்தவர்களும். நாற்பத்தெட்டுகோ
டியே முப்பது லக்ஷம் புத்த ச
மயத்தவர்களும், பதினைந்து
கோடி இந்து மதஸ்தவர்களும், பன்னி
ரண்டு கோடியே எழுபத்தெட்டு லக்ஷ
ம் இஸ்லாமார்க்கத்தவர்களும், அஞ்
ஞானிகள் இருபத்தெட்டு கோடியே
எழுபது லக்ஷமும், எகூதிகள் எண்ப
த்திரண்டு லக்ஷமும், மஜூஸிகளாகிய
பார்சிகள் பத்து லக்ஷமு மிருக்கிறார்க
ள். இவர்களிற் கல்விமான்களைத் தவி
ர, மற்றவர்க ளெல்லோரு மவரவர்க
ளுடைய தாய் தகப்பன் அநுசரித்து
வந்த வேதத்தையே, சரியான வேத
மென்று நம்பிக்கை வைத்திருப்பதல்
லாது, பிறருடைய மார்க்கத்தைப்பற்
றிய விசாரணை செய்கிறதில்லை அப்
படிப்பட்டவர்களுடைய ஈமான், தக்
லீதுடைய ஈமானாக விருக்கும். நம்மு
டைய வேதத்தின் மேன்மை விளங்கு
ம்பொருட்டு, இப்போது உலகத்தில்
குறிப்பாயிருக்கிற நாலு வேதங்களையு
மொப்பிட்டுக் காட்டுவோம். அப்படி
காட்டுவதனால், நமது மார்க்கத்தைப்
பற்றிய ஈமான் உறுதியாகிறதுமல்லாம
ல், பிற மதஸ்தவர்களோடு பேசும்போ
து நமது மார்க்கத்தை அவர்கள் மன

மேற்றுக்கொள்ளும்படி செய்வதற்குங் கூடியதாயிருக்கும். அதற்காக ஒரு ஆலிமும், ஒரு கிறிஸ்துப் பாதிரியும், ஒரு பிராமணக்குருவும், ஒரு புத்தருடைய குருண்ணன்சையுமொரு விடத்திற்கூடி, குறித்த நாலு வேதங்களில் எந்த வேதம திறமென்று ஆலோசிக்கிறது போலும், அந்த ஆலிமை நோக்கி மற்ற மூவருமொவ்வொருவராய்த் தங்கள் தங்கள், வேதங்களை யெடுத்துக் காட்டுவதுபோலும், பின்பு அந்த ஆலிம் அவர்களுக் கெல்லாம் மறுமொழி சொல்லி, நமது மார்க்கத்தின உண்மையை அக்கிலேற்றுக்கொள்ளத் தக்கதாய் விளக்கிக் காட்டுவதுபோலும், எழுதுகிறோம். அவர்க ளொவ்வொருவரும் நல்ல கல்விமான்களென்றும், வீண் தற்கமிடாது உண்மையை யறியக் கருத்துள்ளவர்க ளென்றும் வைத்துக் கொள்ளுவோம்.

கிறிஸ்துப்பாதிரி ஆலிம்சாகிபைப்பார்த்து, ஆலிம்சாகிபவர்களே! எங்களுடைய மார்க்கத்திற்கு இன்ஜீலென்று நீங்கள் சொல்லுகிறது எங்களுடைய மார்க்கம் உண்மை என்பதற்கு, உங்களுடைய புறுக்கான் வேதமே அத்தாட்சி சொல்லுகின்றது ஈசா அலைகிஸ்ஸலாம் அல்லாகுத்தாலாவுடைய றூஹு லென்றும், தகப்பனில்லாது மறியமுடைய கற்பத்தில் அல்லாகுத்தாலாவுடைய றூஹைக்கொண்டு தரித்துப் பிறந்து, இன்ஜீல் வேதத்தைப் பிரசங்கித்தார்களென்றும், உங்கள் குறுவானிலே சொல்லியிருக்கின்றது. சூறத்து தகுறீமில் இம்றானுடைய மகள் மறியம், தனது பர்ஜைக் கார்மானஞ் செய்துக்கொண்டாள். நாங்களெங்களுடைய றூஹைக்கொண்டூதினோமென்று சொல்லியிருக்கிறது.

இன்னும் எங்களுடைய மார்க்கத்தினடித்தாளம், தவுறாத்து வேதத்தில் மூசா அலைகிஸ்ஸலாமுக்கு தூறுசீனமலையில்வைத்து அல்லாகுத்தாலா கொடுத்த, பத்துக் கற்பனைகளாயிருக்கும். நீங்களெங்கள் வேதத்தைப் பொய்யென்று சொல்வது, நாங்கள் பிதா, மகன், பரிசுத்த ஆவியாகிய மூன்றுஞ்சேர்ந்த, திருத்துவக் கடவுளென்று விசுவாசங்கொண் டிருப்பதனாலேயே. ஆனால், இன்ஜீல் வேதத்தில் கடவுளே, அல்அபு வல்உம்மு வல்இபுனு. என்று சொல்லியிருக்கிறானே; அந்த வேதம் உண்மையென்று சொன்னால். அந்த வேதத்திற் சொல்லியிருப்பதும் உண்மையாயிற்றே ஆகையால் நம்முடைய வேதம, உங்களுடைய வேதத்தைக்கொண்டே உண்மையென்று அத்தாட்சிப்படுகின்றது. உங்கள் வேதம், இதிலும் திறமென்று நீங்க ளத்தாட்சிப்படுத்த வேண்டுமென்று சொன்னார்.

பிராமணக்குரு ஆலிமைப்பார்த்து நம்முடைய வேதமாவது மிகவுந் துப்புரவானது. நீங்கள் அல்லாகுத்தாலாவென்று சொல்லுகிற கடவுளுக்கு நாங்கள், பரமாத்துமாவென்று சொல்லுகிறோம். அந்தப் பரமாத்துமா வன்றி, வேறொன்றுமில்லை. சகலமுமவனே, அவனல்லாது வேறொன்றுமில்லையென்பது எங்கள் விசுவாசம். நீங்கள் வுசூலைப்பெற்றுக்கொள்ளுகிறதென்பதற்கு, நாங்கள் சமாதியென்று சொல்லுகிறோம். இந்தச் சமாதியைப் பெற்றுக்கொள்ளுதற்குத் தெண்டிக்கிற விதங்களுக்கு நீங்கள் சுலூக்கென்று சொல்லுகிறீர்கள். அதற்கு நாங்கள் யோகமென்று சொல்லுகிறோம். இதை எட்டுவகையாகப் பிரித்திருக்கின்றன

முதலாவது, இயமம். அதாவது:— பசி, தாகம் முதலிய தேட்டங்களை யொடுக்குதல். கொல்லாமை, ஒரு உயிரையுங் கொல்லா திருக்கிறது. மெய்மை கூறல், உண்மை பேசுகிறது. கள்ளாண்மை, களவு செய்யாதிருக்கிறது. பிறர்பொருளிச்சியாமை, இந்திரியடக்கம், அதாவது:—ஐம்புலனைக்கொண்டுண்டாகிற தேட்டங்களை யடக்குதல்.

இரண்டாவது, நியமம். அதாவ

...—தவம். அதற்கு நீங்கள் தப்பாவென்று சொல்லுகிறது. தூய்மை, அதற்கு ...புல அலோக்கு என்று நீங்கள் சொல்லுகிறது நம்மைத் துப்புரவாக்கியும், நல்ல நூலோதுதல், தஸவ்வுடைய கித்தாபுகளை யோதுதல். மனமுடந் திருத்தல், இதற்கு நீங்கள் ரிளாவென்று சொல்லுதல். அதாவது:—தனக்குண்டாயிருப்பதைப் பொருந்தி, சந்தோஷமாயிருத்தல் தெய்வம் வழிப்படுதல், தேவ விருப்பத்துக்கிஷ்டமாய் நடக்குதல்.

மூன்றாவது, ஆசனம். அதாவது:—தியானம் செய்யும்போதிருக்கிற பல மாதிரி, இருப்புகள் அவைகளை இங்கு சொல்லத் தேவையில்லை.

நாலாவது, சுவாசத்தை யேற்றுகிற இறக்கிற பற்பல விதங்கள்.

ஐந்தாவது, உபாதியை நீக்கி புறை ஒறுக்கல். அதாவது:—சரீரத்துக்கு நோவு வருத்தங்களுண்டானாலும் அவைகள் தனக்கு உணர்வில்லா திருத்தல்.

ஆறாவது, தாரணை தன்மனத்தை ... கடம், இதயம், நெற்றி, கபாலம், ...யாகிய இவைகளிலொன்றிற் றரிப்பிக்குதல்.

ஏழாவது, தியானம். இதற்கு நீங்கள் திக்கிரென்று சொல்லுகிறது பஞ்சேந்திரியங்களால் தோற்றுகிற யாவையும் மறந்து, சிவனிலே மனத்தைத் தரிப்படுத்துதல்.

எட்டாவது, சமாதி. நமது ஆத்துமா, சரீரத்திலிருந்தாலும் அதின்பற்றற்று, தன்னைத்தானறிந்து நிற்கும் தன்மைக்குச் சமாதியென்று சொல்லப்படும். இதுதான் நமது ஞானவழியாகவிருக்கும்.

ஆனால் எங்கள் பிராமணகுருக்கள் பெருஞ் ச... கோவில்களைக் கட்டி விக்கிரகங்களை வைத்து வணங்கும்படி அறிவீனர்களைச் செய்விக்கிறார்கள். அதனால் பிறமதஸ்தர்கள் நம்முடைய வேதமாவது விக்கிரகங்களை யாராதனை செய்கிற வேதமென்று இழிவாகப் பேசுதற்கிடமாகின்றது. உங்கள் வேதத்திலேதானும் எவ்வளவு நூதனமென்கிற பித்த அத்தான காரியங்களுண்டாயிருக்கின்றன. அந்த பித்த அத்தங்களைக்குறித்து உங்கள் மார்க்கத்தை இழிவாக்கிப்பேச நியாயமில்லாதது போலவே, நீங்கள் எங்களுடையவேதத்திலுண்டாயிருக்கிற நூதனமான தப்பான காரியங்களைக் கவனியாமல் நானெடுத்துச் சொல்லியவைகளுக்கு மறுமொழி சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேனென்று சொன்னார்.

குறுன்ஞன்சை ஆலிமை நோக்கிச் சொன்னதாவது, ஆலிம்சாகிபவர்களே எங்களுடைய வேதமாகிறது புத்திக்கும் சாஸ்த்திரத்துக்குஞ் சரியாயிருக்கும் யாவையும் படைத்தவனொருவனிருக்கிறானென்பதற்கு அத்தாட்சிகளில்லாததால் நாங்கள் படைத்தவனொருவனிருக்கிறானென்று விசுவாசங்கொண்டதல்லே ஆனால் எங்கள் நப்சு மிகவும் மேன்மையான தன்மையிலிருக்கிறதென்பதை யேற்றுக் கொள்ளுகிறோம் உலகத்தில் ஜீவித்திருப்பது துன்பமாயிருக்கும் அப்படியிருந்தும் ஜீவித்திருக்கும். ஆசைதன்னைத் திரும்பவும் பிறக்கச்செய்கின்றது. பிராமணக்குருக்கள் சொல்லியபடியே நமது தீயகுணங்களை யெல்லாமடக்கி சற்குணங்கொண்டால் தேவர்களாகி தெய்வலோகஞ் சேருவோம் அங்கிருந்தும் நமது ஜீவியத்தை விரும்பாது. தேட்டங்களெல்லாம் மற்றுப்போவதே முத்தியடைவதாயிருக்குமென்று சொல்லிமுடித்தபோது ஆலிம்சாகிபவர்கள் மூவருக்கும் மறுமொழி சொல்லத் தொடங்கினார்

(மறுபத்திரிகையில்வரும்)